# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 91/2018

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 7 (LW6) | நாள் | 09.09.2024 |
| பெயர் | முருகேசன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. எதிரி ஆஜரின்மைகாரணமாக மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் கார்குடி முருகன்கோவில் தெருவில் வசித்து வருகிறறேன். விவசாய வேலை செய்கிறேன். பூதங்குடி மேலத்தெருவைசேரந்த தங்கவேல் மகன் கலியமூரத்தியை தெரியும். நானும் அவரும் ஒன்றாக வேலைக்கு போய் வருவோம். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு கடலங்குடி விநாயகர் கோவில் தெரு வழியாக சம்பவ இடத்திற்கு சுமார் காலை 07.00 மணியளவில் நாங்கள் வந்து கொண்டிருந்தபோது மணல்மேடு போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதிக்கொண்டு வரைபடம் வரைந்தார்கள். போலிசார் எழுதிய பார்வை மகசரில் நானும் காலியமூரத்தி என்பவரும் சாட்சி கையெழுத்துபோட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ. 4** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் 1 வது எதிரியே குறுக்கு விசாரணை செய்தார்

சம்பவம் நடந்த இடம் கடலங்குடி விநாயகர் கோவில் தெரு என்றால் சரி. சம்பவம் நடந்த தேதி ஞாபகம் இல்லை. சம்பவத்தை நான் பார்க்கவில்லை. நான் குடியிருக்கும் இடத்திற்கும் கடலங்குடி விநாயகர் கோவில் தெருவிற்கும் சுமார் 2 கிமீ தொலைவு இருக்கும். நானும் கலியமூர்த்தி என்பவரும் வேலைக்குபோகும் போது

போலிசார் அந்த இடத்தில் இருந்தார்கள். இரண்டு பேரும் எப்படி அந்த இடத்திற்கு வந்தோம் என்றால் வேலைக்கு போவதற்காக அந்த வழியாக போனோம். 1 வது எதிரியாகிய நான் எங்கு குடியிருந்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 வது எதிரியின் வீட்டை நானும் 17 பேரும் சேர்ந்து இடித்து விட்டோம் என்றால் தவறு. காவல் துறையினரிடம் என்மீதும் மற்ற 17 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்து அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல செய்து உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் மயிலாடுதுறை JM -1 நீதிமன்றத்தில் CC 54/2017 என்ற வழக்கு என்மீதும் மற்ற எதிரிகள் மீதம் கோப்புக்கு எடுக்கப்பட்டு நான் அதில் 12 வது எதிரி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 வது எதிரி நீதிமன்றத்தில் கொடுத்த புகார் சம்பந்தமாக மணல்மேடு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் பார்வை மகசர் வரைந்த அன்றே கையெழுத்துபோட்டேன். அதன்பிறகு எந்த கையெழுத்தும் போடவில்லை. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்துபோட்டேன் என்றால் தவறு. போலிசார் பார்வை மகசரை என்னிடம் படித்து காண்பிக்கவில்லை வரைபடத்தை தான் காண்பித்தார்கள். 1 மற்றும் 2 வது எதிரிகள் எந்த குற்ற செயலும் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரரும் மணல்மேடு போலிசாரும் சொல்லிக்கொடுத்தப்படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.